GOSPEL JOURNEY TUTICORIN NOVEMBER 2015









R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Posted at Batlagundu Post office on 10th Jan 2016

*Our Radio & TV Programs*
Sri Lanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &Tamilan TV
on Monday &
Saturday 7.30 P.M

Cell : 94435 58041
Phone : 04543 263 278
E-Mail arjunanglory@gmail.com

**To**

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 16 | ஜனவரி 2016 | கனி 2



## காகம்

## Raven



THE WORD OF CHRIST

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக" - கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**
TV:Every Monday 7.30-7.45 p.m and Every Saturday 7.30-7.45 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on Shubhsandesh Hind Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hind Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV and Puthuyugam TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Tuesday 6.15-6.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Monday 7.00-7.15 a.m and Thursday 9.30-10.00 p.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Rakshana TV:**
Every Sunday 6.00 p.m Every Wednesday 6.30 p.m Every Thursday 11.00 a.m Satyavani TV Online:www.Sakthitv.in Every Wednesday & Friday 8.00 p.m
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*


**THE WORD OF CHRIST**
Monthly Magazine

**Editor**
**B.ARJUNAN**

**Associate Editor**
**K.R.K.Ravi Asir**


அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்நிதியில் பேசுகிறோம் - 2கொரி.2:17

### தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாத இதழின் உள்ளே...


ஆசிரியருரை
ஜெ.சி.சோட்,
பெட்டி சோட் அவர்களின் செய்தி
ஜெர்ரிபேட்ஸ், பவுலா பேட்ஸ்
அவர்களின் செய்தி மற்றும்
வேதபாடம்,
வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி
மற்றும் பல...


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 185

## போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வோர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை மார்ச் மாத இதழில்!

1. ஒருவன் பயமுறுத்த ஆயிரம்பேரும், ஐந்துபேர் பயமுறுத்த நீங்கள் அனைவரும் எப்படிப்போவீர்கள் என தீர்க்கன் சொன்னான்?
2. சோதனையைச் சகிக்கிற மனுஷன் எப்படிப்பட்டவன்?
3. நீங்கள் கர்த்தருக்கென்று உங்களை விருத்தசேதனம்பண்ணி, உங்கள் இருதயத்தின் எத் தோலை நீக்கிப்போடுங்கள் என தீர்க்கன் சொன்னான்?
4. சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும் உங்கள் சுயாதீனத்தைத் துர்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல், எவருக்கு அடிமைகளாயிருக்க வேண்டும்?
5. மனுபுத்திரனே, நீ கலக வீட்டாரின் நடுவிலே தங்கியிருக்கிறாய்; காணும்படிக்கு அவர்களுக்குக் கண்கள் இருந்தாலும் எப்படிப் போகிறார்கள்?
6. எந்த அப்போஸ்தலன் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எனக்கு அறிவித்தபடி நான் என் கூடாரத்தைவிட்டுப்போவது சீக்கிரத்தில் நேரிடுமென்று அறிந்து என எழுதுகிறான்?
7. நேபுகாத்நேச்சார் காலத்தில் தன் தேவனுடைய நாமத்தின்படியே பெல்தெஷாத்சார் என்னும் பெயரிடப்பட்டு, சாஸ்திரிகளின் அதிபதி என அழைக்கப்பட்டவன் யார்?
8. வாலிபர் பொல்லாங்கனை ஜெயிக்க முடியுமா? அப்படி ஜெயித்ததாக எழுதும் அப்போஸ்தலன் யார்?
9. எவர்களின் தொகை அளக்கவும் எண்ணவுங்கூடாத கடற்கரை மணலைப் போலிருக்கும்?
10. சத்தியத்தின்படி நேசித்திருக்கிறவளுக்கு ஒரு நிருபத்தை எழுதின அப்போஸ்தலன் யார்?

**போட்டியாளர்கள் கவனிக்க...**

ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மெபைல் எண் எழுதவும். நமது மாத இதழை 100 பேருக்கு அறிமுகம் செய்து முகவரிகளை சேகரித்து ஆங்கிலத்தில் தெளிவாக மாவட்டம் மற்றும் பின்கோடு உடன் அனுப்பி வைப்பவர்களுக்கு ஒரு முழு வேதாகமம் பரிசாக கொடுக்கப்படும்.

**இம்மாதம் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும்** 3

நாள்: ஜனவரி 23 தேதி, சனிக்கிழமை
நேரம்: காலை 10 மணிமுதல் மாலை 7.30 மணி வரை
கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம்
68, சமத்துவபுரம், பவானி தாலுகா
ஈரோடு - 638 314
சகல தொடர்புக்கும்:
சகோ: தனபாலன், சபை ஊழியர்
9750542265



## காகம்
Raven




- Corvidae குடும்பத்தைச் சேர்ந்த பறவை இது
- பொதுவாக இது நீளத்தில் 62 CM வரை இருக்கும்
- நோவாவின் காலத்தில் முதலாவது காகத்தை வெளியே விட்டான் - ஆதி.8:7
- அசுத்தமான பறவைகளில் ஒன்று - லேவி.11:15
- இவைகளின் குஞ்சுகளுக்கு தேவன் ஆகாரம் கொடுக்கிறார் - யோபு 38:41
- எலியாவைப் போஷித்தது காகங்கள் - 1இரா.17:1-6
- இவைகளைப்போல உள்ள ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள் என்றார் நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து - மத்.6:26



சிறுவர் பகுதி

## நாம் அதை எளிதாய் ஜெயித்துக்கொள்ளலாம்

வேதபகுதி: எண்ணாகமம் 13:27-33 K.Mohan



அருமைப் பிள்ளைகளுக்கு நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தேவனிடத்தில் விசுவாசம் வைத்த அநேகரை குறித்து வேதாகமம் சாட்சியிடுகிறது. அவர்களில் யோசுவாவும், காலேபும் குறிப்பிடப் பட்டவர்கள். எப்படியென்றால் கர்த்தர் மோசேயை நோக்கி: கானானை சுற்றிப் பார்க்கும்படி கோத்திரத்திற்கு ஒருவராக இஸ்ரவேல் புத்திர தலைவர்களை அனுப்பச் சொன்னார்.

கானானை சுற்றிவிட்டு வந்த கோத்திரப் பிதாக்களின் தலைவர்கள் என்ன சொன்னாங்கனு தெரியுமா? ஐயோ அந்த தேசத்திலே குடியிருக்கிறவங்க பலவானுங்க, அந்த பட்டணங்களும் அரணிப்பானதும் பெரியதுமா இருக்கு மேலும் அங்கே ஏனோக்கின் குமாரரையும் கண்டோம். நாங்கள் போய்ச் சுற்றிப் பார்த்து வந்த அந்த தேசம் தன் குடிகளைப் பட்சிக்கிற தேசம்; நாங்கள் அதிலே கண்ட ஜனங்கள் எல்லாரும் மிகவும் பெரிய ஆட்கள். அங்கே இராட்சதப் பிறவியான ஏனோக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப்போல் இருந்தோம், அவர்கள் பார்வைக்கும் அப்படியே இருந்தோம் என்று சொல்லி, இப்படி இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே தாங்கள் சுற்றிப் பார்த்துவந்த தேசத்தைக்குறித்து துர்ச்செய்தி பரம்பச் செய்தார்கள்.

ஆனா நம்பிக்கையில் தளர்ந்துபோகாதிருந்த யோசுவா மற்றும் காலேப் என்ன சொன்னாங்க தெரியுமா? நாம் உடனே போய் அந்த பட்டணங்களை சுதந்தரித்துக்கொள்வோம்; **நாம் அதை எளிதாய் ஜெயிக்கலாம்** என்றார்கள். பரிட்சை எழுதப்போகிற மாணவ மாணவிகளைக் கேட்கும்போது என்ன சொல்லுவாங்க? நான் பாஸ் பண்ணிடுவேன் என்பர். ஆனால் அதில ஒரு சிலர் இருப்பாங்க நான் என்னத்த பாஸ் பண்ணப்போறேன், ஒன்னுமே சரியா படிக்கவில்லடா என்று சொல்லுவாங்க. அதே போல பாஸ் பண்ணாமலே போயிடுவாங்க. அதைப்போல அவனோடேகூடப் போய்வந்த மனிதரோ: நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது; அவர்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்கள் என்றார்கள். நீங்கள் எப்படிப்பட்டவர்கள்? பலவான்களா அல்லது பலவீனர்களா? யோசுவா, காலேபைப் போல பலவான்களாக இருக்க பிரயாசப்படுவோம்.

**மனப்பாட வசனம்**

“ஜாக்கிரதையுள்ளவர்களுடைய கை ஆளுகைசெய்யும்; சோம்பேறியோ பகுதிகட்டுவான்” (நீதி.12:24)



தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 16 ஜனவரி-2016 கனி - 2

ஆசிரியருரை

## தேவனுடைய மனுஷன்
## The Man of God



**நா**ம் தேவனால் உண்டாக்கப்பட்டபடியால் தேவனுடைய மனுஷன் என்று அழைக்கப்படுகிறோம். இது எத்தனை ஆசீர்வாதமான வார்த்தை என்று பார்த்தீர்களா? உலகில் நாம் பார்க்கிற எல்லாமே தேவனால் சிருஷ்டிக்கப்பட்டது. அதில் விசேஷமாக மனிதன் தேவனால் உண்டாக்கப்பட்டான். ஆகையால் அவன் தேவனுடைய மனுஷன் என்று அழைக்கப்படுகிறான். தேவனுடைய மனுஷன் என்று நாம் அழைக்கப்படும்போது அவருடைய குணங்கள் நம்மில் காணப்படவேண்டுமல்லவா! ஆம், எலியாவைக்குறித்து யாக்கோபு இப்படியாக சொல்லுகிறார்; "எலியா என்பவன் நம்மைப்போல பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை. மறுபடியும் ஜெபம்பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது" (யாக்.5:17,18). அன்பானவர்களே, இந்த எலியா தேவனுடைய மனுஷன் என்று அழைக்கப்பட்டான். இவனைப் பற்றி யாக்கோபு சொல்லும்போது எலியா நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும் என்று குறிப்பிடுகிறார். இன்றைக்கு அநேகர், தேவனுடைய ஊழியக்காரனுக்கு எந்தவிதமான பாடுகளும் இருக்காது என்று நினைக்கிறார்கள். அப்படியல்ல, மனிதனாக பிறந்த எல்லோருக்குமே பாடுகள் இருக்கத்தான் செய்கிறது. அதிலே குறிப்பாக தேவனுடைய ஊழியக்காரருக்கு அதிகமான பாடுகள் இருக்கும் என்றே சொல்லலாம்.

இந்த எலியா நம்மைப்போல பாடுள்ள ஒரு மனுஷனாகவே இருந்தார். ஆனால் அவர் கருத்தாய் ஜெபம்பண்ணினார். அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் மழைபெய்யாமலிருந்தது. மீண்டும் ஜெபித்தார் அப்பொழுது மழைபெய்தது என்று காண்கிறோம். இவருடைய கருத்தான ஜெபம் தேவசமுகத்தில் கேட்கப்பட்டது. இன்றைக்கு நீங்களும் நானும் இவரைப்போல தேவனால் உண்டாக்கப்பட்டவர்கள்தான் நாமும் தேவனை நோக்கி கருத்தாக ஜெபிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். மேலும் இவருடைய உருக்கமான ஜெபத்தை நாம் 1இரா.17:20-21-ல் வாசிக்கிறோம். "என் தேவனாகிய கர்த்தாவே, நான் தங்கியிருக்க

இடங்கொடுத்த இந்த விதவையின் மகனைச் சாகப்பண்ணினதினால் அவளுக்குத் துக்கத்தை வருவித்தீரோ என்று கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு; அந்தப் பிள்ளையின்மேல் மூன்றுதரம் குப்புறவிழுந்து: என் தேவனாகிய கர்த்தாவே, இந்தப் பிள்ளையின் ஆத்துமா அவனுக்குள் திரும்பிவரப்பண்ணும் என்று கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான்". இந்த உருக்கமான ஜெபத்தைக் கர்த்தர் கேட்டார். அப்பொழுது பிள்ளையின் ஆத்துமா அவனுக்குள் திரும்பிவந்தது. எலியா பிள்ளையை அவளுடைய தாயினிடத்தில் ஒப்புவித்தான். அப்பொழுது அந்த ஸ்திரீ என்ன சொன்னாள் என்று தெரியுமா? "நீர் தேவனுடைய மனுஷன் என்றும், உம்முடைய வாயிலிருந்து பிறக்கும் கர்த்தரின் வார்த்தை உண்மை என்றும், இதினால் இப்போது அறிந்திருக்கிறேன் என்றாள்" (1இரா.17:24). தேவனுடைய மனுஷனின் வார்த்தைக்கு தேவன் செவிகொடுக்கிறார் என்று அறிகிறோம். நீங்களும் நானும் தேவனுடைய மனுஷனாக இருப்போமானால் அவர் நம்முடைய வேண்டுதலுக்கு செவிகொடுப்பார்.

**இந்த எலியா கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தான்.** தேவனுடைய மனுஷன் என்றால் நாம் யாருக்கும் பயப்படவேண்டிய அவசியமில்லை என்று அர்த்தமல்ல. அநேகர் அப்படித்தான் தவறாக புரிந்துகொண்டு அநேகருக்கு எதிர்த்து நிற்கிறார்கள். நாம் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற வேண்டுமானால் அதிகாரங்களுக்கு எதிர்த்து நிற்கக்கூடாது. அவைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். இது தேவனுடைய திட்டமாக இருக்கிறது. அந்தப்படியாக ஒரு முறை எலியாவுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாகி; "நீ இவ்விடத்தை விட்டுக் கீழ்த்திசையை நோக்கிப் போய், யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையில் ஒளித்துக்கொண்டிரு. அந்த ஆற்றின் தண்ணீரைக் குடிப்பாய்; அங்கே உன்னைப் போஷிக்க, காகங்களுக்குக் கட்டளையிடுவேன் என்றார். அவன் போய், கர்த்தருடைய வார்த்தையின்படியே யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையிலே தங்கியிருந்தான்" (1இரா.17:3-6). ஒருவேளை இந்த இடத்தில் நாமாக இருந்தால் என்ன செய்திருப்போம் என்பதை சற்றே சிந்திக்கும்படி உங்களை கேட்டுக்கொள்கிறேன். மினரல் வாட்டர் குடிக்கக் கூடிய நாம் ஆற்றுத் தண்ணீரை குடித்திருப்போமா? சுகாதாரமாக சாப்பிட்டுக்கொண்டிருக்கும் நாம் காகங்கள் கொண்டுவந்து கொடுக்கும் அப்பத்தை தின்று இருப்போமா? ஆனால் எலியா கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தவனாக ஆற்றுத் தண்ணீரைக் குடித்துக்கொண்டும், காகங்கள் கொண்டுவந்து போடும் அப்பத்தையும் இறைச்சியையும் சாப்பிட்டுக்கொண்டு, ஆகாப் ராஜாவுக்கு பயந்து ஒளிந்துகொண்டிருந்தான். மாபெரும் அற்புதங்களை செய்த இந்த தீர்க்கன். கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடந்தான். இன்றைக்கு நாம் இவ்விதமாக கர்த்தருடைய வர்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றோமா? என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும்.

ஆற்றுத் தண்ணீர் வற்றியவுடன் மீண்டும் கர்த்தருடைய வர்த்தை எலியாவுக்கு உண்டானது. "நீ எழுந்து, சீதோனுக்கடுத்த சாறிபாத் ஊருக்குப் போய், அங்கே தங்கியிரு; உன்னைப் பராமரிக்கும்படி அங்கே இருக்கிற ஒரு விதவைக்குக் கட்டளையிட்டேன் என்றார்" (1இரா.17:9). சாறிபாத் ஊரிலே எத்தனையோ வசதிபடைத்தவர்கள் இருந்திருக்கக்கூடும் ஆனால் எலியா ஒரு விதவையின் வீட்டிற்கு அனுப்பப்பட்டார். நம்முடைய தேவன் ஏழைகளின் தேவன் அவர் ஏழைகளை அதிகமாக நேசிக்கிறார், அவர்களைக் காப்பாற்றுகிறார். ஆகையால்



நியாயத்தீர்ப்பு வந்து கொண்டிருந்தது. அது எலியாவின் மூலமல்ல. மற்றவர்கள் அதைச் செய்வார்கள். எல்லாம் தேவனுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது.

3.அநேகமாக எப்போதும் தன்னலத்தைச் சுற்றியே மனச் சோர்வுமிருக்கும். அதற்கு சிறந்த விடுதலை பிறருக்கு உதவி செய்வதில் ஈடுபடுங்கள்.

4. சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்குங்கள். எலியாவின் சூழ்நிலையை தேவன் உடனடியாக மாற்றிவிடவில்லை. ஆனால் எலியா தன்னை மாற்றிக் கொள்ள அவர் உதவினார்.

நிறைவாக

1. மிகவும் மோசமான காலகட்டத்தில் கூட எல்லாம் வழங்கப்படவில்லை. இந்த உலகம் இன்னும் தேவனுடைய உலகமே நாமும் தேவனுடைய மக்களே.

2. எலியாவைக் காட்டிலும் நமக்கு இன்னும் அதிக உறுதியானவைகள் (வாக்குத்தத்தங்கள்) உண்டு. கிறிஸ்து பொல்லாங்கனை தோற்கடித்தார். அவருடைய ராஜ்யம் நிச்சயமானது, யாராலும் வெல்ல முடியாதது. அவருடைய அன்பு ஒருபோதும் தோற்காது.

## ஒவ்வொரு ஆராதனையிலும் நீங்கள் ஏன் கலந்து கொள்ளவேண்டும் என்பதற்கான 10 காரணங்கள்

### 10 Reasons Why You Should Attend Every Service

1. இயோசுவோடு இருப்பதற்கு – மத்.18:20
2. இயேசுவோடு கண்டுகொள்ளக்கூடிய தனிப்பட்ட சமாதானம் மற்றும் மனநிறைவுக்காக – பிலி.4:7
3. வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளக்கூடிய மனது நமக்குத் திறக்கப்பட – லூக்.24:45
4. பரிசுத்த ஆவியை அவித்துப்போடாதிருக்க – 1தெச.519
5. ஆறுதலையும் ஐக்கியத்தையும் பெறும்படிக்கு – எபி.10:24
6. நம்முடைய விசுவாசத்தைப் பெலப்படுத்தி ஸ்திரப்படுத்தும்படிக்கு – ரோ.10:17
7. நம்ஜீவியத்தை மாற்றும் அனுபவத்தின் சக்தியை இழக்காமலிருக்க – யோவா.20:19,24,26–28
8. நம்முடைய ஆவிக்குரிய அனலை காத்துக்கொள்ள – மத்.24:12
9. நம்முடைய ஆவிக்குரிய பசியைப் பூர்த்தி செய்யும்படிக்கு – மத்.5:6
10. ஏனென்றால் இது கர்த்தர் வரும்போது நான் எங்கே இருக்க விரும்புகிறேனோ அங்கேயிருக்க – மாற்.13:32,33

## பாடம் -16 எல்லாம் இழந்துவிட்டோம் என்று தெரியும்போது

## When All Seems Lost *- Jerry Bates*




**– சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

5. ஆன்மீகத்திலுள்ளவர்களுக்கு அதைரியம் ஏற்படுவது இயல்புதான் மனச் சோர்வை (தைரியமின்மையை) வெல்வதற்கு நான்கு வழிகள்.

**1. சரீர ஆரோக்கியத்தை நன்றாக பாதுகாக்க வேண்டும்** (1இரா.19:5,6).

1. நல்ல உடல் ஆரோக்கியம் நல்ல மனநலத்திற்கு உதவும்.

2. அதிகமாக உண்பதும் குறைவாக உண்பதும் மனச் சோர்வுக்கு இடமளிக்கும்.

3. குறைவான ஓய்வு அல்லது உடற் பயிற்சி மனச் சோர்வை உண்டாக்கும். தூங்குவது மற்றும் சாப்பிடுவதுமான சுழற்சி இரண்டு முறை திரும்ப செய்யப்படுகிறது.

**2. உங்களுடைய மனச் சோர்வைப் பற்றி பேசுங்கள்.**

1. மரத்தடியில் இருந்து போனபின்பு ஒரு குகையில் போய் மறைந்துக் கொள்கிறார்.

2. மனச் சோர்வு நம்மை மற்றவர்களிடமிருந்து விலக்கிச் சென்றுவிடும்.

3. தேவன் எலியாவிடம், இங்கே நீ என்ன செய்கிறாய், என்று மென்மையாகக் கடிந்துகொண்டார்.

4. பின்பு எலியா தன் ஏமாற்றத்தை தேவனிடம் ஊற்றிவிட்டார். (1இரா.19:10,14-ல் மறுபடியும் சொல்லப்படுகிறது).

5. ஒரு பிரச்சனையை வாய்விட்டுப் பேசிவிடுவது என்பது பாதிப் பிரச்சனை தீர்ந்தது போன்றது. இன்றைக்கு நான் அதை உங்கள் இருதயத்திலிருந்து எடுத்து விடுங்கள் என்று சொல்லுகிறேன்.

**3. தேவனைப் பற்றிய புதிய பார்வையை அடையுங்கள்.**

1. எலியா தான் தனியாக இருப்பதாகச் சொன்னார் அநேகமாக எல்லா மனச் சோர்வுக்கும் தைரியத்துக்கும் இதுவே மூலகாரணம். தேவன் அங்கே செயல்படவில்லை.

2. தேவன் ஒரு பலத்த காற்று, பூமியதிர்ச்சி, அக்கினி, மற்றும் மெல்லிய சத்தத்தின் மூலம் தான் இன்றும் அங்கே இருக்கிறார் என்பதைக் காண்பித்தார். நாமும் அதே உண்மையைக் கண்டுகொள்ள வேண்டும். வேதத்தை வாசியுங்கள். நீங்கள் பிடிக்காதது போல் உணர்ந்தால் கூட உங்களுக்கு ஜெபிப்பது போல் சிந்தை இல்லாவிட்டால் கூட ஜெபியுங்கள்.

3. இன்னும் உண்மையாய் விசுவாசத்தில் இருக்கிற 7000-ம் பேர் இருக்கிறார்கள் என்று எலியாவுக்கு தேவன் சொன்னார். நாம் ஒருபோதும் தனித்திருந்ததே கிடையாது. தேவனற்ற நேரங்களில்கூட விசுவாசிகள் தேவனுக்குரிய அர்ப்பணிப்போடு இருந்திருக்கிறார்கள்.

4. நம்மால் மாற்றக்கூடாத ஒன்றை ஒத்துக் கொள்ளுங்கள். உதாரணம் சரீரத்தில் பவுலுக்கிருந்த முள் (2கொரி.12:7). எல்லா மனிதரையும் தன்னால் மாற்ற முடியாது என்பதை புரிந்துகொள்ள வேண்டியது எலியாவுக்கு அவசியமாயிருந்தது.

**4. உங்களை நீங்களே ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.**

1. தேவன் எலியாவிடம் திரும்பிச் சென்று ஆசகேலை சீரியாவின் மீதும் யெகூவை இஸ்ரவேலின் மீதும் இராஜாவாக அபிஷேகம் பண்ணும்படி சொன்னார்.

2. உன்னுடைய வாரிசாக எலிசாவை அபிஷேகம் செய். எலியா இன்னும் செய்யவேண்டிய வேலை தேவனிடமிருந்தது. பொல்லாங்கு செய்கிறவர்களுக்கு



எலியாவை அந்த விதவையின் வீட்டிற்கு அனுப்பினார். அவளோ சாவின் விளிம்பிற்கு சென்றுவிட்ட ஒரு பெண். அவள் வீட்டில் ஒரு பிடி மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே இருந்தது. அதை சுட்டு சாப்பிட்டு தானும் தன் மகனும் செத்துப்போக இரண்டு விறகு பொறுக்கிக்கொண்டு இருந்தாள். அதிலே பங்குக்கு எலியா அனுப்பப்பட்டார். அதிலும் ஒரு சிறிய அடையைப் பண்ணி முதலாவது எனக்கு கொண்டுவா என்று சொல்லி அவளுக்குக் கட்டளையிட்டார். அவளோ தேவனுடைய மனுஷனுக்குக் கீழ்ப்படிந்தபடியால் ஒன்றும் பேசாமல் அதை ஆயத்தம் பண்ணிகொண்டுபோய் கொடுத்தாள். நடந்த அற்புதம் என்ன? பானையில் மா செலவாகவில்லை, கலயத்தில் எண்ணெய் குறைவில்லை. பஞ்சகாலமுழுவதும் சாப்பிட்டார்கள். நம்முடைய தேவன் எவ்வளவு வல்லவர் என்று பார்த்தீர்களா?

ஆகாப் ராஜாவுக்கு பயந்து இவ்வளவு நாட்களாக ஒளித்துக்கொண்டிருந்த இந்த எலியாவுக்கு மீண்டும் கர்த்தருடைய வார்த்தை உண்டானது. என்னவென்றால்; "நீ போய் ஆகாபுக்கு உன்னைக் காண்பி; நான் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடுவேன் என்றார். அப்பொழுது எலியா ஆகாபுக்கு தன்னைக் காண்பிக்கப்போனான்; பஞ்சமோவெனில் சமாரியாவிலே கொடிதாயிருந்தது" (1இரா.18:1,2). இந்த வசனத்தின் பின்பகுதியில் கவனித்தீர்களா, பஞ்சமோ சமாரியாவிலே கொடிதாயிருந்தது. ஆனால் கர்த்தருடைய வார்த்தை என்ன? நான் மழையை கட்டளையிடுவேன். நீ ஆகாபுக்கு உன்னைக் காண்பி என்றார். ஆகாபுக்கு காண்பிக்கப்போனால் என்னநடக்கும்? எலியாவைக் கொன்று போடுவான் அல்லது சிறைக்கைதியாக்கிவிடுவான். மழையும் இல்லை தண்ணீரும் இல்லை சமாரியாவிலே ஒரே பஞ்சம். மழை வரப்போகுது என்றால் அதற்குரிய அறிகுறிகள் காணப்படவேண்டுமல்லவா? ஆனால் அதற்குரிய அறிகுறிகள் ஒன்றுமில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆகாபினிடத்தில் எலியா அனுப்பப்பட்டார். அவர் தேவனுடைய மனுஷனாயிருந்தபடியால் உடனே கர்த்தருடைய வாத்தைக்குக் கீழ்ப்படிந்து சென்றார். இப்படி கீழ்ப்படிவோரை கர்த்தர் ஒவ்வொருநாளும் எதிர்பார்க்கிறார்.

இந்த எலியா பரலோகத்திற்கு ஏறிப்போனார் என்பதை அறிவீர்களா? நாமெல்லாரும் பரலோகத்திலிருந்து கர்த்தர் வருவார் என எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கிறோம் அல்லவா? ஆனால் எலியாவுக்கோ பரலோகத்திற்கு ஏறிப்போகும் பாக்கியம் கிடைத்தது. மரித்து அடக்கம்பண்ணப்படாமல் அப்படியே அவர் எடுத்துக்கொள்ளப்பட்டார். எத்தனை ஆச்சரியமான காரியம். ஒருமுறை எலியாவும் எலிசாவும் பேசிக்கொண்டு நடந்துபோகையில், "இதோ, அக்கினிரதமும் அக்கினி குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்தது; எலியா சுழல்காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான்" (2இரா.2:11). பலமுறை எலியா இப்படி மறைந்திருக்கக்கூடும். எப்படி சொல்லுகிறேன் என்றால் அரண்மனையில் வேலை பார்த்து வந்த ஒபதியா என்ற தேவமனுஷன் சொல்லும்போது; "நான் உம்மைவிட்டுப்போனவுடனே ஒருவேளை கர்த்தருடைய ஆவியானவர் உம்மை எடுத்து, நான் அறியாத இடத்திற்குக் கொண்டுபோவார்; அப்பொழுது நான் ஆகாபிடத்திற்குப் போய் அறிவித்த பின்பு, அவன் உம்மைக் காணாவிட்டால், என்னைக் கொன்றுபோடுவானே ; உமது அடியானாகிய நான் சிறுவயதுமுதல் கர்த்தருக்குப் பயந்து நடக்கிறவன்" என்றான் (1இரா.18:12). எலியாவைப் பற்றி நன்கு அறிந்தவனாக இந்த ஒபதியா இருந்தான். அன்பானவர்களே, பழைய ஏற்பாட்டு

தீர்க்கதரிசிகளில் எலியா ஒரு அருமையான தேவனுடைய மனுஷனாக இருந்தான். அவன் இயேசுவோடு அவருடைய மரணத்தைக்குறித்து பேசுகிறவனாக புதியஏற்பாட்டில் காணப்பட்டான். ஒரு காரியத்தை இரண்டு மூன்று பேர் கூடி பேசுகிறார்கள் என்றால் அந்த காரியத்திற்கு உடன்பட்டவர்களே அப்படிப்பட்டவர்களோடு பேச முடியும் அல்லவா? அந்த விதமான பாக்கியத்தை பெற்றவனாக இந்த எலியா என்ற தேவனுடைய மனுஷன் காணப்பட்டான். "ஆறுநாளைக்குப் பின்பு, இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவனுடைய சகோதரனாகிய யோவானையும் கூட்டிக்கொண்டு தனித்திருக்கும்படி உயர்ந்த மலையின்மேல் போய், அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று. அப்பொழுது மோசேயும் எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள்" (மத்.17:1-3). எலியா வாழ்ந்த நாட்கள் கிறிஸ்துவுக்கு முன். ஆனால் அவன் இயேசுவோடு புதுஉடன்படிக்கையின் காலத்தில் நிறைவேற்றப்போகிற திட்டங்களைக் குறித்து ஆண்டவர் இயேசுவோடு பேசுகிறவர்களாக சீஷர்களுக்குக் காணப்பட்டார்கள். வானத்துக்கு எழுந்து போக இயேசுவுக்கு மட்டுமே அதிகாரம் இருந்தது. "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" என்று நாம் அப்.1:11-ம் வசனத்தில் படிக்கிறோம். ஆகையால் நாம் ஆண்டவர் இயேசுவின் வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கிறோம். ஆனால் எலியா என்ற தேவ மனுஷன் அவனுடைய நாட்களில் பரலோகத்திற்கு ஏறிப்போனான் என்று படிக்கிறோம். அந்த தேவனுடைய மனுஷனுக்குக் கார்த்தர் கொடுத்த அதிகாரம் எத்தனை பெரியது என்று பார்த்தீர்களா? இன்றைக்கு உயிரோடிருக்கும் நாமும் ஒரு நாளில் ஆண்டவர் இயேசுவோடு ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவோம் என்று 1தெச.4:17-ல் படிக்கிறோம். தேவனுக்கு பயப்படுகிற ஒவ்வொருவரையும் அவரோடு நித்திய நித்தியமாக வைத்துக்கொள்ளும்படியாக அவர் நம்மைச் சேர்த்துக்கொள்ளுவார். அதற்கு நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா?

**நீ தேவனுடைய மனுஷனானால் அவருடைய சித்தம் செய்ய ஆயத்தமாயிருக்கிறாயா?**

எலியா என்ற தேவனுடைய மனுஷன் நம்மைப்போல பாடுள்ள மனுஷனாயிருந்தும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவராய் ஜீவித்தார். தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஒவ்வொருநாளும் நடந்து தேவனுடைய வார்த்தைக்கு எதிர் வார்த்தை பேசாமல், தேவனை நோக்கி ஜெபித்து வல்லமையுள்ள தேவனுடைய மனுஷனாக வாழ்ந்து முன்னோடியான தீர்க்கதரிசியானார். இன்றைக்கு இப்பூமியில் வாழ்ந்துகொண்டிருக்கும் நீங்களும் நானும்கூட தேவனால் உண்டாக்கப்பட்ட மனுஷர்களாக இருக்கிறோம். இந்த எலியாவைப்போல நம்மை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து வாழ்வோம். "நம்முடைய தேவன் உங்களை தமது அழைப்புக்குப் பாத்திரராக்கவும், தமது தயையுள்ள சித்தம் முழுவதையும் விசுவாசத்தின் கிரியையையும் பலமாய் உங்களிடத்தில் நிறைவேற்றவும் வேண்டுமென்று, எப்பொழுதும் உங்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறோம்" (2தெச.1:12). அப்போஸ்தலனாகிய பவுல் புதிய ஏற்பாட்டு காலத்தில்



நிகழ்வுகளில் விசுவாசம் வைத்திருக்கலாம். அதிகமான நாட்களல்ல இது நீண்ட தீபகற்பத்தை சுனாமி தாக்கின போது அதுபற்றி ஜனங்கள் பேசினது போல இது இருக்கும். அப்போது ஜனங்களுக்கு என்ன நேரிட்டது என்ற கதையை இன்னும் ஜனங்கள் கூறுகின்றனர்.

ஆனால் இங்கே ராகாப் தன்னுடைய விசுவாசத்தில் செயல்பட்டாள். இஸ்ரவேலர் உலர்ந்த தரைவழியாக கடந்து சென்றபோது அவள் அங்கே இல்லை. எமோரியர்கள் சங்கரிக்கப்பட்டபோது அவள் அங்கே இல்லை ஆனால் அவர்களுடைய தேவன் வல்லமையுடையவர் என்று விசுவாசித்தாள். அவள் தன் கண்களால் அதைப் பார்க்கவில்லை ஆனால் இன்னும் அதிகமாக அவள் விசுவாசித்தாள்.

அவள் தனக்கும் தன் குடும்பத்திற்கும் அவர்கள் தயவு செய்ய வேண்டுமென கர்த்தர் பேரில் ஆணையிட்டுக் கொடுக்கும்படி வேவுக்காரர்களிடம் கேட்டாள். அவர்கள் அவள் அவர்கள் செய்ததை ஒருவருக்கும் சொல்லாதிருந்தாள் எங்கள் ஜீவனே உங்கள் ஜீவனுக்கு ஈடு என ஆணையிட்டுக் கொடுத்தனர்.

வச.15 அவள் அவர்களைக் கயிற்றினாலே ஜன்னல்வழியாய் இறக்கி விட்டாள் (அந்த நகரத்தின் வாசல் அடைக்கப்பட்டிருந்தது என்பதை நினைவுகூருங்கள்) அவளுடைய வீடு அலங்கத்தின் மதிலில் இருந்தபடியால் அவர்கள் அங்கிருந்து வெளியேற ஏதுவாயிருந்தது.

வச.16 அவர்களை நோக்கி தேடுகிறவர்கள் உங்களைக் காணாதபடிக்கு, நீங்கள் மலையிலே போய் மூன்று நாள் ஒளித்திருந்து, பின்பு உங்கள் வழியே போங்கள் - அவள் திட்டமிட்டாள் - உங்கள் வழியே போங்கள் எல்லாம் நல்லபடியாக நடக்கிறது என நம்புகிறேன் என்று வெறுமனே கூறவில்லை - பெரிய வழிகாட்டுதலைக் கொடுத்தாள்.

வச.18 எங்களை இறக்கி விட்ட இந்த ஜன்னலில் இந்த சிவப்பு நூல் கயிற்றை கட்டிவை படை வரும்போது உன் குடும்பம் காப்பாற்றப்படும் என்றனர். மீண்டும் காப்பாற்றப்படும்படிக்கு அவள் இன்னும் சிலவற்றை செய்யவேண்டிய வளாயிருந்தாள். அது முற்றிலும் வெளிப்படையானதா, மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்.

வச.23 அவர்கள் அவளுடைய வழிகாட்டுதலைப்பின்பற்றி, காக்கப்பட்டு, யோசுவாவிடம் திரும்பி வந்து அவள் சொல்லியிருந்ததைச் சொன்னார்கள்.

தேவ செய்திகள் அடங்கிய
CD & DVD எங்களிடம்
உள்ளது ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்
உங்கள் முகவரி மற்றும்
மொபைல் எண்ணை SMS
பண்ணவும். **9443558041**





## ராகாப் - RAHAB

-Paula Bates

**- சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

**நி**னைவில் கொள்ளுங்கள் அவளது மிகப்பெரி விசுவாசக்கிரியைகளினிமித்தம் அவளுடைய நாமம் எபிரெயரில் இந்நாள் வரைக்கும் விளங்குகிறது யோசு.2:9 (வாசிக்கவும்).

1. தேவன் அந்த தேசத்தை அவர்களுக்குக் கொடுக்கப்போகிறார் என அவள் அறிந்திருக்கிறாளெனவும்.

2. தேசத்தின் ஜனங்களுக்கு அவர்களைப்பற்றி திகில் பிடித்திருக்கிறதெனவும்

3. இஸ்ரவேலர் நிமித்தம் தேசத்து குடிகள் எல்லாரும் சோர்ந்துபோனார்களெனவும் அறிவேன் என்று அந்த வேவுக்காரரிடம் கூறுகிறாள்.

நாம் தேவனுடைய வல்லமையைக் குறித்து **நடுங்குகிறோமா?**

ஏனென்றால்; (யோசு.2:10) நாங்கள் தேவன் இஸ்ரவேலுக்காக எவ்வாறு சிவந்த சமுத்திரத்தை வற்றிப்போகப்பண்ணினார் என நாங்கள் கேள்விப்பட்டோம்.

மேலும் யோர்தானுக்கு அப்புறத்திலிருக்கிற எமோரியரின் இரண்டு ராஜாக்களுக்கு நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதையும் கேள்விப்பட்டோம்.

விளைவு: எங்கும் செய்யப்படாததை இஸ்ரவேல் செய்ததை எரிகோ ஜனங்கள் கேள்விப்பட்டபோது அவர்களுடைய இருதயம் கரைந்து போயிற்று எல்லாருடைய தைரியமும் அற்று போயிற்று. ராகாப், அவரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர் எனக் குறிப்பிடுகிறாள்.

பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து விடுபட உதவிய எமோரியரின் ராஜாக்களை முழுவதுமாக சங்கரித்த இஸ்ரவேலின் தேவனோடு ஒப்பிடுகையில் தாங்கள் வலிமையற்றவர்கள் என்பதை எரிகோவின் ஜனங்கள் அறிந்திருந்தார்கள்.

ராகாப் வேவுக்காரரை பாதுகாத்து மறைத்து வைத்திருந்ததைக் காட்டிலும் மிகவும் அதிகம் செய்தாள். அவள் அவர்களுக்கு ஜனங்களின் நினைவுகளைப் புரிந்து கொள்ள உதவினாள். அவளுடைய ஜனங்கள் இந்த மாபெரிய தேசத்து ஜனங்களோடு சண்டையிட விரும்பவில்லை. ராகாப்... விசுவாசித்தாள் மேலும் அது அவளை பயமற்றவளாக தைரியமுள்ளவளாக செயல்பட வைத்தது.

யாக்.2:23 (வாசிக்கவும்) ...ராகாப் என்னும் வேசி தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறுவழியாய் அனுப்பிவிட்டபோது, **கிரியைகளினாலே நீதியுள்ளவளாக்கப்பட்டாள்.**

யாக்.2:26 (வாசிக்கவும்) "அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்தாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது.

40 ஆண்டுகளுக்கு மேலாக ஜனங்கள் சிவந்த சமுத்திரத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தபடியினால் எரிகோவில் அநேகர் இந்த அனைத்து பெரிய



வாழ்ந்தவர்களில் மிகவும் முக்கியமானவர். பேச்சோடு நின்று விடாமல் வாழ்ந்து காட்டியவர். ஆகையால் அவர் எழுதும்போது விசுவாசத்தின் கிரியையும் பலமாய் உங்களிடத்தில் நிறைவேற்றவும் வேண்டுமென்று எப்பொழுதும் உங்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறோம் என்று தெசலோனிக்கேய சபையாருக்கு எழுதியிருக்கிறார். ஆம், அன்பானவர்களே, அழைத்த தேவனுக்குப் பாத்திரராக நடந்து கொண்டு உங்களுடைய விசுவாசத்தை கிரியைகளின் மூலமாக காண்பியுங்கள். தேவனுடைய சித்தத்தை ஒவ்வொருநாளும் நிறைவேற்ற பிரயாசப்படுங்கள். நீங்கள் தேவனால் உண்டாக்கப்பட்டவர்கள் என்பதை ஒருநாளும் மறந்துபோகாதிருங்கள். எலியாவை பெலப்படுத்தின கர்த்தர் உங்களையும் பெலப்படுத்தும்படியாக உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

### பொது அறிவுக் களஞ்சியம்

**முதன்மைகள்**


- **முதன் முதலில் செயற்கை கோள் அனுப்பிய நாடு – ருஷ்யா**
- **முதன் முதலில் இந்தியாவில் செய்தித்தாளை தோற்றுவித்தவர் – ஜேம்ஸ்கிக்கி**
- **முதன் முதலில் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தவர் – டென்சிங்**
- **முதன் முதலில் சீஷர்களுக்குக் கிறிஸ்துவர்கள் என்ற பெயர் – வழங்கப்பட்ட இடம் – அந்தியோகியா**
- **முதன் முதலில் கிறிஸ்துவின் சபை துவங்கப்பட்ட இடம் – எருசலேம்**

### நடப்புச் செய்திகள்

- லோக்சபா மற்றும் சட்டசபைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த வேண்டுமென பார்லிமெண்ட் நிலைக் குழு பரிந்துரைத்துள்ளது.
- உலகளவில் 45 டால்பின் இனங்கள் உள்ளன. இதில் மன்னார் வளைகுடா பகுதியில் கடல் மாசு இரைச்சலால் டால்பின்கள் அழிந்துவருகின்றன.
- டிரைவர் இல்லாமல் கார்கள் இயக்குவதற்கான தொழில் நுட்பத்தை உருவாக்குவது தான் எங்கள் நிறுவனத்தில் அடுத்த இலக்கு என கூகுள் நிறுவன தலைமைச் செயல் அதிகாரி சுந்தர் பிச்சை கூறியுள்ளார்.
- உலகளவில், தொழில் துவங்க சிறந்த நாடுகள் பட்டியலில், இந்தியா, 97-வது இடத்தில் உள்ளது.
- அணு ஆயுதங்கள் மற்றும் அணு ஏவுகணை திட்டங்களை பாகிஸ்தான் கைவிட வேண்டுமென அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. **- நன்றி தினமலர் நாளிதழ்**

'ஒரே வழி' வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள் இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி, ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College, Post Box No. 5, Batlagundu-624 202, S.INDIA**



# நாங்கள் தவறிழைத்து விட்டோம் என நான் அனுமானிக்கிறேன்
# I Guess We Were Wrong

J.C.Choate

ஒரு சில ஆண்டுகளுக்கு முன் கொரியாவில் ஒரு மத அமைப்பு கிறிஸ்து ஒரு குறிப்பிட்ட தேதியில் மீண்டும் பூமிக்கு வரப்போகிறார் என பிரசங்கிக்கத் தொடங்கியது. இந்தக் குழு புதுதில்லியில் ஒரு அலுவலகத்தைக் கொண்டிருந்தது. இதைப்போல் உலகம் முழுவதிலுமுள்ள மற்ற நகரங்களிலும் அலுவலகத்தைக் கொண்டிருந்தது. இவர்களுடைய முக்கிய வேலை கர்த்தருடைய வருகையின் நாளை மக்களுக்கு இலக்கிய அறிவிப்பின் மூலம் சொல்வதை அணைத்துப்போடுவதேயாகும். புதுதில்லியிலுள்ள ஒரு சுவிசேஷ பிரசங்கியாராகிய சன்னிடேவிட் அவர்களோடு பேசும்படிக்கு அவர்களுடைய உள்ளூர் அலுவலகத்திற்குச் சென்றார். ஆனால் அங்கே அந்த மக்களிடமிருந்து அதிகமான விஷயங்களைப் பெறுவது இவருக்குக் கடினமாகக் காணப்பட்டது. அவர் ஒருநாள் அல்லது கிறிஸ்துவின் வருகைக்காக முன்னேற்பாடு செய்திருந்த அந்த நாளுக்கு முன் இரண்டாவது முறை அவர்களை போய்ப்பார்க்கச் சென்றார், ஆனால் அவர்களது அந்த அலுவலகம் காலிசெய்யப்பட்டு பூட்டியிருக்கக் கண்டார். அந்த பகுதியில் சிலர், கொரியர்கள் கிறிஸ்து திரும்ப வரும்போது தாங்கள் தங்களுடைய நாட்டில் இருக்க விருப்பம் கொண்டவர்களாக தங்களுடைய தேசத்திற்கு சென்று விட்டார்கள் என அவரிடம் கூறினார்கள். உண்மையாக அவர்கள் கிறிஸ்துவின் வருகைக்காக முன்னேற்பாடு செய்திருந்த அந்த நாளில் கர்த்தர் வரவில்லை. இந்நாளிலும் அவர் வரவில்லை. ஆனால் அதன் பிறகு காவலர் கொரியாவில் அந்த தலைவனின் வீட்டிற்கு அவனை கைது செய்யும்படி சென்றார், அவனுடைய வியாக்கியானம், "நல்லது, **நாங்கள் தவறிழைத்து விட்டோம் என நான் அனுமானிக்கிறேன்**" எனக் கூறியதாக செய்தித் தாளில் வாசித்தோம்.

ஆனால் கொரியாவிலுள்ள காவலர் ஏன் இந்த மனிதனை கைது செய்தார்? ஏனென்றால் அவன் கர்த்தருடைய வருகைக்கு நாளைக் குறித்து மேலும் பலர் தங்களுடைய பணம், சொத்து இன்னும் பலவற்றை, கர்த்தருடைய வருகைக்குப் பின் அவர்களுக்குத் தேவைப்படாது என்பதனால் அவைகளை அந்த மனிதனுக்கு கொடுத்தவர்களிடமிருந்து பெரும் செல்வத்தை திரட்டிக் கொண்டான். ஆனால் கேள்வி என்னவென்றால், அந்த ஜனங்களோடு அவனுக்கு என்ன அவசியம் இருந்திருக்கும்? ஏன் அந்த ஜனங்கள் அந்த சொத்துக்கள் அனைத்தையும் அவனுக்குக் கொடுக்கும்படிக்கு மிக முட்டாளாக இருந்திருக்கிறார்கள்? என்ன நடந்து



உலகத்திற்கேற்றார் போல் அலங்கரித்துக் கொள்ளாவிட்டால் உலகம் நம்மை மதிக்காது என்று சாக்கு போக்கு சொல்லலாம். எது எப்படியிருப்பினும் தேவனுடைய பார்வையில் எது விலையேறப் பெற்றதோ அதுவே நமக்கு அலங்காரம், நம்மை அழகுபடுத்தக் கூடிய இந்த சாந்த குணத்தையும், அமைதியான குணத்தையும் ஆவியானவர் அழிந்து போகாத அலங்கரிப்பு என்று கூறுகிறார். ஒருவேளை இந்த இரண்டு ஆபரணங்களினாலும் நம்மை அலங்கரித்துக் கொள்வது என்பது மிகக்கடினமாகக் காணப்படலாம். இந்த அருமையான குணங்களினால் நம்மை அலங்கரித்துக் கொள்ள முயற்சிக்கும் போது பலவிதமான அவமானங்களும் பரிகாசங்களும் நமக்குத் தடைகளாக உருவெடுக்கலாம். நாம் சாந்தத்தோடும், அமைதியோடும் நடந்து கொள்ளும்போது உறவினரின் மத்தியில், நமக்குப் பிரியமானவர்கள் மத்தியில், வேலைபார்க்குமிடத்திலும் மிகவும் சிறுமையும், எளிமையும் அற்பமுமாக எண்ணப்படலாம், ஆனால் தேவனுடைய பார்வையில் நம்முடைய இந்த இரண்டு அலங்கரிப்பும் விலையேறப்பெற்றது என்பதை மறந்து விட வேண்டாம்.

சாந்தமும், அமைதலுள்ள ஆவியுமாகிய இந்த ஆபரணங்களை நாம் தரித்துக் கொண்டோமானால் நம் இருதயத்திலிருந்து நல்ல பொக்கிஷங்கள் வெளிப்படும். "நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்" (லூக்.6:45). என்ற வசனத்திற்கேற்ப நல்ல கனிகளைக் கொடுப்போம். நல்ல கனிகளாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம் நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் போன்றவற்றை வெளிப்படுத்துவோம். அப்பொழுது கிரியையுள்ள கிறிஸ்தவர்களாக காணப்படுவோம். அநேகரை ஆதாயப்படுத்திக் கொள்வோம். சாந்தம் மற்றும் அமைதலுள்ள ஆவியாகிய இந்த ஆபரணங்களால் நம்மை அலங்கரிக்கும்போது புறம்பான அலங்கரிப்பை நம் மனம் அற்பமாக எண்ணத்துவங்கும். இவையிரண்டும் இருதயத்தில் நிறைந்திருக்கும் போது பொல்லாத குணங்களுக்கு இடமில்லாமல் போய்விடும். உலகத்திற்கு ஒத்த வேஷம் தரியாதிருங்கள் என வேதம் கூறுகிறது எனவே "தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்தபுத்தியினாலும் தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும் தங்களை அலங்கரிக்க வேண்டும்" (1தீமோ.2:10). புறஜாதிகளை நமக்கு மாதிரிகளாக கொள்ளக்கூடாது. புறஜாதிகளுடைய மார்க்கத்தைக் கற்றுக்கொள்ளக்கூடாது (எரே.10:2).

அன்பு சகோதரிகளே, இப்புத்தாண்டிலே புதிய தீர்மானம் எடுப்போம். புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டு சரீரத்தினாலும் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துவோம். தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்ற அலங்கரிப்பாயிருக்கிற ஆபரணங்களைத் தரித்துக்கொண்டு பரிசுத்த மணவாளனாகிய இயேசுவை சந்திக்க ஆயத்தமுள்ளவர்களாயிருப்போம். அநேகரை நம்முடைய நடக்கையினால் ஆதாயப்படுத்துவோம். தேவன் தாமே உதவி செய்வாராக.



# அலங்காரம்

## The Ornament

*J.Glory Arjunan*

பெண்கள் பகுதி

ஸ்திரீகள் தங்களை அலங்கரித்துக் கொள்வதில் அதிக நாட்டமுடையவர்கள் என்பது ஒத்துக் கொள்ளக்கூடிய ஒன்றுதான். இன்றைய உலகில் பெண்கள் தங்களை பலவிதங்களில் அலங்கரித்துக்கொள்கின்றனர். நவநாகரீக உடைகளினாலும், ஆபரணங்களினாலும், அலங்கரிப்பதோடு Beauty Parlour க்கும் சென்று தங்கள் முகம், தலை, நகங்கள் போன்றவற்றை அழகுபடுத்துவதிலும் மிகவும் ஆர்வமுடையவர்களாகக் காணப்படுகின்றனர். சாதாரணமாக ஒரு பெண் தன்னை அலங்கரித்துக் கொள்வது தவறில்லை. இதைத் தவறு என்று சொன்னாலும் உலகம் ஒத்துக்கொள்ளாது. ஆனால் கிறிஸ்தவ ஸ்திரீகளாகிய நமக்கு இவ்வகையான அலங்கரிப்பு அவசியமா? அல்லது இவ்வகையான அலங்கரிப்பு தகுதியானதா? என்பதைப் பற்றி வேதாகமத்தின் துணை கொண்டு ஆராய்வோம்.

அன்பு சகோதரியே, "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்" (1கொ.6:19,20) என்று வேதம் கூறுகிறது. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் பாவமற கழுவப்பட்ட ஒவ்வொருவரும் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவர்கள் அதாவது இயேசு நம்மை தமது இரத்தத்தைக் கொடுத்து தேவனுக்கென்று விலைக்கு வாங்கியிருக்கிறார். ஆனபடியினால் நம்முடைய சரீரமும், ஆவியும் நமக்கல்ல அவருக்குச் சொந்தமானதாக மாறிவிட்டது. அப்படியிருக்க நம்முடைய சரீரத்தையும், ஆவியையும் அவருக்குப்பிரியமானபடி அலங்கரிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் எனத் தங்களை அழைத்துக் கொள்பவர்கள், தாங்கள் ஆவியில் நிறைந்து ஜெபிப்பதாகவும் தேவனை மகிமைப்படுத்துவதாகவும் கூறுவர், ஆனால் தங்களுடைய சரீரத்தை தேவனுக்கேற்ற விதத்தில் அலங்கரிக்க வேண்டுமென்பதை மறந்துவிடுகின்றனர்.

நம்முடைய இருதயம் மகா திருக்குள்ளதும், மகா கேடுள்ளதுமாயிருக்கிறது என வேதம் கூறுகிறது. இருதயத்தில் பலவிதமான ஆசை இச்சைகள் புறப்படலாம். உலகத்தின் ஆசைகளும், இச்சைகளும், கண்களின் இச்சையும், மாம்சத்தின் இச்சையும் ஒழிந்துபோம் (1யோவா.2:16,17). ஆனால் நம்முடைய இருதயத்தில் தங்கியிருக்க வேண்டிய குணம் சாந்தமும் அமைதியுமாம். அதுவே உங்களுக்கு அலங்காரமாயிருக்கும். ஆம், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக் கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது" (1பேது.3:4) என்று பேதுரு கூறுகிறார். இது வாசிப்பதற்கு ஏற்றது, ஆனால் நடைமுறைக்கு ஒத்துவராது, ஓரளவுக்காவது நம்மை



கொண்டிருந்தது என்பதை உணரும்படிக்கு அவர்கள் ஞானமுள்ளவர்களாய் இருந்திருப்பார்கள் என நீங்கள் நினைப்பீர்கள்.

நாம் இது மாதிரி கதைகளை பல முறை கேள்விப்பட்டிருக்கிறோம். பல வருடங்களுக்கு முன் கொழும்பு மற்றும் ஸ்ரீலங்காவிலுள்ள யெகோவா சாட்சி பிரசங்கியாருடன் பேசி, அவன் அந்த வருடத்திற்கான தன்னுடைய குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பாமல் அவனுடைய வரிகளை செலுத்தாமலுமிருந்தான் என அறிந்து கொண்டேன். இயேசு இவ்வாண்டுக்குள் வருகின்றார், ஆனபடியினால் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பவேண்டிய அவசியமில்லை. தன்னுடைய வரிகளை செலுத்த வேண்டிய அவசியமுமில்லை, உலகிலுள்ள ஒவ்வொன்றும் முடிவுக்கு வரப்போகிறது என்ற காரணம் கூறப்பட்டது. அந்த மனிதனுடைய மற்றும் அவனை போலுள்ள மற்றவர்களின் முட்டாள்தனம் எப்பேர்பட்டது! அவன் கர்த்தருடைய வருகைக்கான நாளை குறிப்பிட்டிருந்த அந்நாளில் கர்த்தர் வராத பின்பு அவன் என்ன செய்தான் என்பது குறித்து நான் ஆச்சரியப்பட்டேன்! நிச்சயம், அவனுடைய குழந்தைகள் அவ்வாண்டு பள்ளிக் கல்வியை இழந்தார்கள். அவன் தன்னுடைய வரிகளைக் கட்ட வேண்டியவனானான்.

இவை கர்த்தர் மறுபடியும் வரமாட்டார் என்று சொல்லுவதாக அர்த்தமில்லை. ஏனென்றால் கர்த்தர் தம்முடைய வசனத்தில் தாம் ஒரு நாள் மறுபடியும் வருவார் எனக் கூறியிருக்கிறார். ஒரு விஷயம் என்னவென்றால், அவருடைய வருகைக்கான நாளைக் குறிப்பது மனிதனுக்கு மதிகெட்ட செயலாகும். இருந்தபோதிலும் கிறிஸ்து தாமே மறுபடியும் வருவேன் என வாக்களித்திருக்கிறார் (யோவா.14:1-4). தம்முடைய வருகையின் நாழிகையை குறித்து, அவர், **"அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்" என்றார் (மாற்.13:32).** கிறிஸ்து என்ன சொன்னார் எனக் கவனித்தீர்களா? அந்த நாளை அவர்கூட அறியவில்லை, தூதர்களும் அறியார்கள். ஆனால் பரலோகத்திலுள்ள பிதா ஒருவரே அறிவார் என்று சொன்னார். இப்போது கர்த்தருடைய கூற்று உண்மையாயிருக்குமானால், எந்த ஒரு மனிதனும் இதை அறிவதெப்படி? மேலும் எந்த ஒரு மனிதனும் அவருடைய வருகையின் நாளை குறிப்பிடும் படிக்கு மதியீனனாய் இருப்பது எப்படி? நீங்கள் இதை சிவப்பு மையினால் குறித்து வைத்துக்கொள்ளுங்கள்: யாராவது ஒருவர் கிறிஸ்து மறுபடியும் வரும் நாளை அறிவிக்கிறபோது, அவன் தானே, தான் ஒரு மோசம் போக்குகிறவன் என அறிவித்து கொண்டிருக்கிறான். மேலும் அவனுடைய நோக்கம் வஞ்சிக்கிறதும், வேதாகமத்தைக் கற்றறியாது அவனுக்கு செவி சாய்க்க விரும்புகின்ற மக்களை ஏமாற்றுவதுமே ஆகும்.

மனிதர்கள், தாங்கள் கர்த்தருடைய வருகைக்கான நாளை நோக்கி முன்னேற வேண்டும் என்ற எண்ணத்துடன் பல வருடங்களாகவே கவனத்தை ஈர்க்கின்றவர்களாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். சில காரணங்களுக்காக அவர்கள் கர்த்தர் அந்த அறிவிப்பினை வேதாகமத்தில் கண்டுபிடிக்கும்படி பிரசங்கம்

மற்றும் எண்களின் வடிவத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார் என நினைக்கிறார்கள். இது தேவன் மனிதனோடு ஒரு விளையாட்டு விளையாடிக் கொண்டிருப்பதுபோல, அதாவது அவர் அந்த நாளை வேதத்தில் எங்கோ மறைத்து வைத்திருக்கிறார் என்பது போலவும், மனிதனிடத்தில் இதை ஊகித்துப்பார்க்க, நன்றாக யோசித்துப் பார்க்க விட்டு விட்டது போலவும், அதை வெளிப்படுத்த இசைவாயுள்ளதை படம் பிடித்துக் காட்ட முயற்சிக்கிறது போலவும் இருக்கிறது. ஆனால் அது மிகவும் மதியீனமான ஒன்று. இயேசு தாமே தம்முடைய வருகையை அறிந்திருந்தால் ஏன் பிதா ஒருவரே அந்த நாழிகையை அறிவார் எனக் கூற விரும்புவார். மேலும் சிலர் சாமர்த்தியமான மனிதர் அதை விடுவிக்கும்படிக்கு அந்த நாளை வேதாகமத்தில் ஏதோவொரு இடத்தில் எழுதி வைத்திருப்பாரே!

தேவன் மறுபடியும் இயேசு எப்போது வருவார் என்பதை நாம் அறிந்து கொள்ள விரும்பியிருந்தால், நமக்கு வெளிப்படையாகவும், தெளிவாகவும் சொல்லியிருக்க மாட்டாரா?

பேதுரு, ''கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம்; பூதங்கள் வெந்து உருகிப்போம்; பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்'' (2பேது.3;10) என எச்சரிக்கிறார்.

பின்பு பவுல், கிறிஸ்துவை விசுவாசியாதவர்களுக்கும் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் ஆக்கினையை செலுத்தும்படிக்கு கர்த்தர் வருகின்றார் எனக் கூறுகிறார் (2தெச.1:7-9). இப்பாடங்களிலிருந்து அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் இன்றோ, நாளையோ, அடுத்த வருடமோ, இன்றிலிருந்து ஒரு நூறு ஆண்டுகளோ, ஓராயிரம் ஆண்டுகள் கழித்தோ அல்லது எப்பொழுதோ அவரை சந்திக்க நாம் ஆயத்தமுடையவர்களாயிருக்கவேண்டும். கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம்போலவும் ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறதென்று அறியுங்கள் (2பேது.3:8).

நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்திருக்கிறீர்களா? (மாற்.16;16). அவருடைய வருகையில் அவரை சந்திக்க ஆயத்தமாயிருக்கிறீர்களா?




JOIN OUR
WORLD EVANGELISM BIBLE SCHOOL
RIGHT NOW
Contact: 94435 58041

**கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்ய சுவிசேஷகர்கள் (வாலிபர்கள்) தேவை. உணவும், உடையும், மற்றும் உறைவிடமும் கொடுக்கப்படும்.**


**இயேசு சொல்கிறார்:**
"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்"
யோவான்12:26.தொடர்புக்கு :94435 58041



5. லூஸிபர் வீழ்ச்சியடைய காரணமாயிருந்த அவனுடைய மனநிலை என்னவாக இருந்தது?

6. லூஸிபர் சிருஷ்டிக்கப்பட்ட போது, அவன் காப்பாற்றுகிறதற்காக ----------------- என்று விவரிக்கப்பட்டான். அவன் ------- --------- வைக்கப்பட்டான் என்று விவரிக்கப்பட்டிருக்கிறான்.

7. வெளி.12:7-12 வசனப்பகுதியின்படி வானத்திலே யுத்தம் உண்டானபோது யார் யாருடனே யுத்தம் செய்து கொண்டிருந்தார்?

8. சாத்தான் தேவனுடைய சமூகத்தினின்று தள்ளப்பட்ட போது அவன் எங்கே சென்றான்?

9. அவன் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறான்?

10. தேவதூதர்களில் சிலரை குறித்து யூதா எழுதின நிருபத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது?

11. விழுந்து போன தூதர்களுக்கும் எந்த இரண்டு பட்டணங்களுக்கும் இடையே இணையான காரியம் சொல்லப்பட்டிருக்கிறது? அப்பட்டணங்களிலே இருந்த தவறு என்ன? அவைகளுக்கு தேவன் என்ன செய்தார்?

12. தேவன் தமக்கு எதிராக கலகஞ் செய்த தூதர்கள் மன்னிக்கப்படும்படியாக ஒரு வழியை ஏன் உண்டாக்க வில்லை?

13. எத்தனை மனுஷர்கள் சாத்தானுடைய சோதனைகளை உற்றுக் கவனித்து பாவம் செய்திருக்கிறார்கள்?

14. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருக்கு கீழ்ப்படிகிறோம் -------- அவர் இருக்கிறார் என்றும் அவர் எல்லாருக்கும் மேலான தேவனாக இருக்கிறார் என்றும் -------- நாம் ------ இருக்கிறோம்.

15. எவ்வாறு தேவனுடைய அன்பும்,இரக்கமும் நம்மை அடைந்து நம்முடைய பாவத்தின் விளைவுகளிலிருந்து நம்மை இரட்சிக்க முடியும்?

## தெரியுமா?

- K.R.K.Ravi Asir
Associate Editor

தெரிந்து கொள்வோம்

▶ இந்தியாவில் முதன் முதலாக விமானத்தில் பறந்த இந்தியர் ஒரு தமிழர். அவர் பெயர் சி.வி.கிருஷ்ணசாமி செட்டியார். 1910-ம் ஆண்டு கிரகாம் பெல் என்ற வெள்ளைக்காரருடன் சேர்ந்து இவர் பிரயாணம் செய்தார்.

▶ 1818-ம் ஆண்டில் பிரெஞ்சுக்காரர் ஒருவர் மரச் சைக்கிளை தயார் செய்து பயன்படுத்தினார். அப்போது அதற்கு மரக்குதிரை என்று பெயர்.

▶ உலகில் வனவிலங்குகள் நலச் சங்கம் சென்னையில் 1962-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. அதன் முதல் தலைவர் அருண்டேல்.

▶ கிறிஸ்துமஸ் பண்டிகையின் போது கிறிஸ்துமஸ் மரம் நட்டு அலங்கரிக்கும் வழக்கத்தை முதன் முதலில் தொடங்கிவைத்தவர் பிரின்ஸ் ஆல்பெர்ட்டே. ஆண்டு 1840.

▶ ஆங்கில மொழியில் அதிகமாக பயன்படுத்தப்படும் எழுத்து `E' என்னும் எழுத்து. இந்த எழுத்தை பயன்படுத்தாமல் எர்னஸ்ட் வின் சென்ட் ரைட் என்னும் எழுத்தாளர் 'கேட்ஸ்பி' என்னும் புத்தகத்தை எழுதியுள்ளார்.

உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்து வரும் என்று சொல்லக்கேட்டேன்" (வெளி.12:12). மேலும் "உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித்திரிகிறான்" (1பேது.5:8) என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது.

**பாவம் நிறைந்த மனுஷர்களின் முடிவு என்னவாக இருக்கிறது?**

மனுஷர் பாவம் செய்வதை தெரிந்தெடுத்து கொள்கிறார்கள். நம்மில் ஒருவரும் அநேக சமயங்களில் சோதனைகளிலும், சாத்தானுடைய வஞ்சனையிலும் விழாமல் வாழ்ந்திருக்கிறதும், மரித்திருக்கிறதும் இல்லை. பிசாசுக்காகவும், அவனுடைய தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற தண்டனை நமக்கு விதிக்கப்பட்டிருக்கிறதா? (மத்.25:41). மீண்டுமாக தெரிந்தெடுப்பு நம்முடையதாயிருக்கிறது. நாம் தேவனுடைய மகிமையை ஒருபோதும் கண்டதில்லை என்பதை அவர் அறிந்திருக்கிறார். நாம் அவரிடத்தில் அன்பு கூர்ந்து அவருக்கு கீழ்ப்படிகிறோம், ஏனென்றால் அவர் இருக்கிறார் என்றும், அவர் எல்லாருக்கும் மேலான தேவனாக இருக்கிறார் என்றும் விசுவாசிப்பதை நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம்.

"கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர் அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார்; என்றைக்கும் கோபங்கொண்டிரார். அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத்தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள் மேல் அவருடைய கிருபையும் அவ்வள்ளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்.

"தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவு கூருகிறார்" (சங்.103:8-14).

தேவன் உலகத்தின் பொல்லாப்பிலிருந்து நம்மை விடுவிக்க ஒரு வழியை உண்டாக்கியிருக்கிறார். நம்மை இரட்சிக்கவும், இந்த ஜீவனுக்குப்பின் அவரோடே கூட நித்திய நித்தியமாக இருக்கவும் வழியை ஏற்படுத்தியிருக்கிறார். நாம் அவரையும், அவருடைய அன்பையும் இரக்கத்தையும் தெரிந்து கொள்வோமேயாகில், என்றென்றைக்கும் ஜீவனோடிருக்கிற அவருடைய அன்பும், இரக்கமும் எல்லாரையும் சென்றடையும்.

**கேள்விகள்:**

1. இவ்வுலகத்தில் நாம் என்ன காண்கிறோம்?

2. நன்மையையும், தீமையையும் குறித்து சிலமார்க்கங்கள் என்ன போதிக்கின்றன?

3. தேவன் மனுஷருக்குள்ளே தீமையை உருவாக்கினாரா? இல்லை, - --------- ---------- -------- அவர்கள் ------- -------- கீழ்ப்படியாமல் இருக்க.

4. வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தூதர்களின் வகைகளை பெயர் சொல்லவும்.



## வாசகர் கடிதம்

கர்த்தருக்குள் அன்பார்ந்த சகோதரர் B.அர்ஜுனன் ஐயா அவர்களுக்கு எழுதும் அன்பின் லட்டர் என்னவென்றால் உங்கள் அருமையான Religious Book எனது மகள் பள்ளிக்கூட விலாசத்திற்கு போகிறபடியால் அது எனக்கு சில மாதங்களில் கிடைப்பதில்லை. உங்கள் Magzine மிகவும் ஆவலோடு படிப்பேன். ஆகையால் எனக்கும் என் மகன் 2பேருக்கும் அனுப்பும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோன். அதற்காக காணிக்கை ரூ500/- அனுப்பியிருக்கிறேன். எனக்கு வயது 91 எனது மனைவிக்கு 89 எங்களுக்காக ஜெபியுங்கள். கர்த்தர் தாமே உங்கள் குடும்பத்தையும் ஊழியத்தையும் அபரிவிதமாக ஆசீர்வதிப்பாராக. அல்லேலூயா! ஆமென்.

இப்படிக்கு, விசுவாசி D. Chelliah

## ஆசிரியர் கடிதம்

மேற்கண்ட ஐயா அவர்களைப்போல ஒவ்வொரு வாசகரும் தங்களுடைய குடும்ப அங்கத்தினர்களுக்கு இவ்விதழைக்கொடுத்து நோவாவைப்போல முதலாவது உங்களுடைய குடும்பத்தை கர்த்தருக்குள் வழிநடத்தலாமே! தற்போது 5000 பிரதிகள் மாதந்தோறும் அச்சிடுகிறோம். நீங்கள் நமது மாத இதழை மூன்று பேருக்கு அறிமுகம் செய்தால் இவ்வருடத்திற்குள்ளாக நாம் 15000 பிரதிகளாக நம்முடைய மாத இதழை அச்சிட்டு அநேகருக்கு கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்துகொள்ளலாம். இன்றே அந்த முயற்சியில் ஈடுபடுங்கள். உங்கள் யாவருக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

உங்கள் சகோதரன்,
B. Arjunan

## ஆலோசனைக் கடிதம்

கிறிஸ்துவுக்குள் நேசிக்கப்பட்ட எனது அருமை தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் இதழ் ஆசிரியர் அவர்களை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் தங்களை வாழ்த்துகிறேன்.

தாங்கள் மாத இதழில் வரும் வேத அறிவுப்போட்டியில் பங்குகொள்வேன். தங்கள் பார்வைக்கு என்னுடைய மேலான ஓர் ஆலோசனை. என்னவென்றால், வேதாகமம் முழுவதும் வேத அறிவு போட்டிக்கு கொடுப்பதை விட ஓர் அதிகாரத்தில் இருந்து அல்லது ஓர் பகுதியில் இருந்து கேள்விகளை கேட்பீர்களானால் வேதவாசகராகிய எங்களுக்கு இன்னும் எளிமையாக அமையும் வேதத்தை நன்றாக படிக்க உதவும்.

தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

இப்படிக்கு,
பெயர் எழுதாத வாசகி

## நன்றிக் கடிதம்

குமுளியில் நடந்த நற்செய்திக் கூட்டத்தை மிகவும் சிறப்பாக நடத்திய சகோதரர்கள் மற்றும் வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் அனைவருக்கும் காந்திநகர் வேலாயுதம்பாளையம் கிறிஸ்துவின் சபையார் வாழத்துக்களையும் ஸ்தோத்திரத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

இப்படிக்கு,
M. Murugan

**"வீண் சிந்தனைகளை நான் வெறுத்து, உமது வேதத்தில் பிரியப்படுகிறேன்"**
**சங்கீதம் 119:113**

**ஜெபியுங்கள்**

- சென்னை மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக..
- இந்த புதிய வருடத்தை காணச்செய்த தேவனுக்கு நன்றி சொல்லி...
- இவ்வருட வேலைகளில் கர்த்தருடைய கரம் நம்மோடிருக்க...
- உலகத்தில் மனித நேயம் பெருக...
- நம்முடைய மாதஇதழின் வாசகர்களுக்காக...
- தொலைக்காட்சி ஊழியங்களுக்காக...
- வானொலி ஊழியங்களுக்காக...
- வேதாகம பள்ளி ஊழியங்களுக்காக...
- மாதந்தோறும் நடைபெறும் சுவிசேஷ ஊழியங்களுக்காக...
- உலகமெங்குமுள்ள கர்த்தருடைய பிள்ளைகளுக்காக...



## வேத அறிவுப்போட்டி எண் 182 ல் வெற்றிபெற்றவர்கள்

Mrs.செம்புலிங்கம் அன்னம்மாள்-தூத்துக்குடி
Mrs.சாந்தா பழநி - தர்மபுரி
Sis.அல்லிராணிகாட்வின் - சென்னை
A.ரெபேக்காள் - மதுரை
S.தங்கம் - கன்னியாகுமரி
Sis.தேவி ராஜசிங் - திருப்பூர்
N.விஜயானந்த் - குமாரபாளையம்
K.மோகன் - குமாரபாளையம்
Mrs.ருக்மணிஜெயசீலன் - தேனி
D.சாந்தாதேவி - தேனி
Mrs.ராஜம்மாள் - திருப்பூர்
Mrs.லிங்காஜீவரத்னம் - சிவகாசி
S.லதாசூரியமூர்த்தி - தேனி
R.கஸ்தூரி - ஒட்டநத்தம்
M.ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
Tmt.மரகதம் திரவியம் - கோம்பை
T.ராஜாத்தி - கோம்பை
A.டேவிட் ஜெயச்சந்திரன் - மதுரை
T.ஏஞ்சலின் நேசமலர் - மதுரை
Mrs.பொன்னிவிக்டர் - திருப்பூர்
K.S.மாணிக்கவாசகம் - திருச்சி

## வேத அறிவுப்போட்டி எண் 182 ன் விடைகள்

| | |
|---|---|
| 1.அதிசயம் | - நியா.13:18 |
| 2.ஏழு, ஏழு, ஏழு | - வெளி.1:1-17 |
| 3.போவாஸ் | - ரூத் 3:13 |
| 4.பிரதான ஆசாரியன் | - அப்.5:27 |
| 5.பினெகாசின் மனைவி | - 1சாமு.4:21 |
| 6.பாவத்திற்குட்பட்டவர்கள் | - ரோ.3:9 |
| 7.கொன்றுபோடப்பட்டான் | - 2சாமு.4:10 |
| 8.இல்லை, சிலுவையில் | - 1கொரி.2:8 |
| 9.பாகாலின் | - 1இரா.18:26 |
| 10.அநேகர் பாவத்தைவிட்டு மனந்திரும்பவில்லை | - 2கொரி.12:21 |

## வேத அறிவுப்போட்டி எண் 183 ல் வெற்றிபெற்றவர்கள்


A.ரெபேக்காள் - மதுரை
K.S.மாணிக்கவாசகம் - திருச்சி
T.ஏஞ்சலின் நேசமலர் - மதுரை
R.சிவா - பென்னாலூர்பெட்
S.விஜயபிரகாஷ் - கரூர்
Sis.அல்லிராணிகாட்வின் - சென்னை
B.ஸ்டெல்லாம்மா - கூத்தூர்
T.ஜாய்மேரி - திண்டுக்கல்
Mrs.ருக்மணிஜெயசீலன் - தேனி
A.கிரேஸ்ஜெயந்தி - நாமக்கல்
S.லதாசூரியமூர்த்தி - தேனி
Mrs.சாந்தா பழநி - தர்மபுரி
Mrs.செம்புலிங்கம் அன்னம்மாள்-தூத்துக்குடி
S.A.சாமுவேல் - நாமக்கல்
S.R.பெரியசாமி - நாமக்கல்
D.சாந்தாதேவி - தேனி
K.மோகன் - குமாரபாளையம்
S.தங்கம் - கன்னியாகுமரி
Tmt.மரகதம் திரவியம் - கோம்பை
T.ராஜாத்தி - கோம்பை
R.கஸ்தூரி - ஒட்டநத்தம்
M.ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்

## வேத அறிவுப்போட்டி எண் 183 ன் விடைகள்

| | |
|---|---|
| 1.ஆம் | - 2இரா.13:20 |
| 2.ஆம் | - கலா.3:13 |
| 3.தாவீது | - 1நாளா.29:11 |
| 4.தெய்வ பயத்தோடே | - எபே.5:21 |
| 5.யோசபாத் | - 2நாளா.17:6 |
| 6.இயேசுகிறிஸ்து | - பிலி.1:10 |
| 7.கோரேஸ் | - எஸ்றா 6:3 |
| 8.பவுல் | - கொலோ.1:24 |
| 9.நெகேமியா | - நெகே.13:24 |
| 10.பவுல் | - 1தெச.2:9 |



# தேவனிடத்திற்குச் செல்லும் வழியை மனிதன் கண்டு பிடிக்க முடியுமா?
# Can Man Find the Way to God? -Betty



**பெண்கள் பகுதி**




### உலகத்தில் தீமை இருக்கிறது (பாடம் -6) - தொடர்ச்சி

இந்த விளக்கம் தீதி.6:5-ல் சொல்லப்பட்ட உலகளாவிய ஜலப்பிரளயத்துக்கு முன்பு இருந்த மனித சமுதாயத்தினை குறித்த விளக்கத்தை போன்று அதிகமாக இருக்கிறது."மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டு ".

### தேவன் பொல்லப்பை சிருஷ்டித்தாரா?

நாம் மீண்டும் நம்முடைய ஆரம்ப கேள்விக்கு வருகிறோம். தேவன் பொல்லாப்பை உருவாக்கினாரா? வேதவாக்கியங்கள் சொல்கின்றன, "தேவன் உண்டாக்கின எல்லாம் மிகவும் நன்றாயிருந்தது" (ஆதி.1:31) என்று. தேவனிடத்திலோ, தேவன் உண்டாக்கின எந்த ஒன்றிலுமோ பொல்லாப்பு காணப்பட வில்லை. அப்படியென்றால் தீமை எவ்வாறு வந்தது? தெரிந்தெடுத்து கொள்ளும் சுயாதீனத்தில் அப்பியாசம் ஆனபடியால் சிருஷ்டிகரிடத்தில் அன்பு கூரவும், கீழ்ப்படியவும் அல்லது அவருடைய சித்தத்தை அசட்டை செய்யவும், அவருக்கு கீழ்ப்படியாமற்போகவும்.

தேவதூதர்கள் - சிருஷ்டிக்கப்பட்ட ஆவிக்குரிய ஜீவன்கள் - தேவனுடைய பிரசன்னத்தில் ஜீவித்தல். தேவன் இருப்பதையும் அவருடைய அன்பையும் தொடர்ந்து கண்டு உணர்ந்தவர்கள். என்றாலும் வானசேனையில் ஒரு பகுதியினர் தேவனுக்கு எதிராக கலகம் பண்ணுவதை தெரிந்து கொண்டார்கள். அவர்கள் "சாத்தான்" என்றும் "பேல்செபூல்" என்றும் "வலுசர்ப்பம்" என்றும் "பிசாசு" என்றும் அழைக்கப்பட்டவனால் வழிநடத்தப்பட்டார்கள்.

அதன் விளைவாக சாத்தானும் அவனுடைய தூதர்களும் பரலோகத்துக்கு புறம்பே தள்ளப்பட்டார்கள். பாவஞ்செய்த தூதர்களை மீட்க எந்த வழியும் ஏற்படுத்தாமலிருந்திருக்கிறது. ஏனென்றால் அவர்கள் ஆவிகளாயிருக்கிறார்கள் அவர்கள் மெய்யான தேவனுடைய பிரசன்னத்தில் வாழ்ந்தவர்கள். நியாயத்தீர்ப்பின் கடைசி நாளிலே பிசாசும் அவனுடைய தூதர்களும் அவர்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போடப்படுவார்கள் (மத்.25:41) என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த இடைப்பட்ட காலத்தில் சாத்தானும் அவனுடைய சந்தர்ப்ப வாதிகளும் பூமியை பொல்லாப்பினாலும் அதனுடைய சகல விளைவுகளினாலும் கெடுத்து சாத்தானை பின்பற்றுவார்கள். இதைக் குறித்து தேவன் எச்சரிக்கிறார். "பூமியிலும், சமுத்திரத்திலும் வாசமாயிருக்கிறவர்களே! ஐயோ, பிசாசானவன் தனக்குக் கொஞ்சக் காலமாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு,